# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

## பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) மத்திய பிரிவிற்கும் (8-10 வயது), மேற்பிரிவிற்கும் (10-13 வயது) பேச்சுகள் எம்மால் எழுதி வழங்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து 5 நிமிடங்களுக்குள் பேச வேண்டும்.

2) அதிமேற்பிரிவிற்கும் (13-18 வயது), இளைஞர் பிரிவிற்குமான (18-30 வயது) பேச்சுப் போட்டிகளுக்கு தலைப்பு வழங்கப்படும். போட்டியாளர்களே தமது பேச்சை எழுதி மனனம் செய்து பேசவேண்டும். அவர்களது பேச்சு, தலைப்பை ஒன்றியதாக இருத்தல் அவசியம். ஆனால் அந்தப் பேச்சிலுள்ள எழுத்துத்திறன், கருத்துகளுக்கு எவ்வித மேலதிக புள்ளியும் வழங்கப்படமாட்டாது. 5 நிமிடங்களுக்கு மேலாக பேசுமிடத்தும், 3 நிமிடங்களுக்குக் குறைவாகப் பேசுமிடத்தும் புள்ளிகள் குறைக்கப்படும்.

3) போட்டியாளரின் பேசும் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும். **உச்சரிப்பு** (30%), **பொருளுணர்ந்து பேசுதல்** (25%), **சபைமரபும் ஆதிக்கமும்** (25%), **மனனஞ்செய்தல்** (20%), என்ற வகையாகக் கணிக்கப்படும்.

4) **உச்சரிப்புத் திறன்** (30 %)
- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
- தூய தமிழ் உச்சரிப்பு
  As opposed to English accent
  அன்றாட பேச்சுத் தமிழ் அல்லாத பேச்சு
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)

5) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),
- பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களில் தகுந்தவாறு கையாளுதல்
  (உ+ ம்: “அது எங்கே ?” என்பதை “அது எங்கே” போலப் பேசுதல் ஆகாது)
- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6) **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (25%)
- நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல். (“தாரகை நடுவில் தண்மதி போல வீற்றிருக்கும் நடுவர்களே…” போன்ற மிகைப்படுத்தப்பட்ட வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் கிடையாது.)
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்துப் பேசுதல்.(குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, (நடுவர்களை மட்டும்), நிலத்தை, சுவரை, கூரையை பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- முகத்தில் புன்னகை: பேச்சின் பொருளை அனுபவித்து, ரசித்துப் பேசும் பாங்கு.
- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.

(மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

7) **மனனஞ் செய்யும் திறன் (20%)**

- வசனங்களையோ பந்திகளையோ தவறவிடாது பேச்சு முழுவதையும் கூறுதல்.
- எழுத்துப் பிரதியையோ, குறிப்புக்களையோ பார்த்து வாசித்தல் ஆகாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- வசனத்தை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் தொடர்வதற்கு உதவி செய்யலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- சரளமான ஆற்றொழுக்கான பேச்சு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுவதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)
- போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்கள் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

8) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**

- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், போட்டிகளின் நேர அட்டவணையையும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். உங்கள் விண்ணப்பம் முழுமை பெறாவிட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யவும். நீங்கள் எங்களுடன் 10/07/06ற்கு முன்னர் தொடர்பு கொள்ளாதபட்சத்தில், நீங்கள் போட்டியில் தோற்றும் தகுதியை இழக்கின்றீர்கள்.
  எமது கடிதம் கிடைக்காவிட்டால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- போட்டிகளுக்கான பாடலையோ, பேச்சையோ, எழுத்தறிவிற்கான மாதிரி வினாக்களையோ இன்னமும் பெற்றுக் கொள்ளாதவர்கள்,
  - உங்கள் தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது
  - எமது இணையத்தளத்திலோ அவற்றைப் பெறலாம், அல்லது
  - எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை($5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
- உங்கள் மின்னஞ்சல் விபரத்தை ஏற்கனவே தராவிடின், தயவு செய்து அனுப்பி விடவும்.

9) மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

தமிழ் ஊக்குவிப்புப் குழு
அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்